## தேசிய வியாபார முகாமைத்துவ நிறுவகம்

----------------------------------------------------------------

### 1 நிதிக்கூற்றுக்கள்

-------------------------

### 1.1. அபிப்பிராயம்

--------------------

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப் பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய, தேசிய வியாபார முகாமைத்துவ நிறுவகம் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் இந்த அறிக்கையின் 2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களினால் நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய தாக்கங்களைத் தவிர தேசிய வியாபார முகாமைத்துவ நிறுவகத்தின் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலைவரத்தையும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் செயற்பாடுகளிலிருந்தான நிதிசார் விளைவுகளையும் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் பிரதிபலிக்கும் வகையில் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைய நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

-------------------------------------------------------------

### 2.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தலில் தாமதம்

----------------------------------------------------------------

2011 பெப்ரவரி 24 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட வரைபு வருடாந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் போது கண்டறியப்பட்ட கணக்கீட்டுக் குறைபாடுகள் உள்ளடக்கப்பட்ட ஓர் அறிக்கை 2011 ஏப்ரல் 05 ஆம் திகதி நிறுவகத் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. அக் குறைபாட்டைச் சீராக்கி திருத்தப்பட்ட கணக்குகள் 2011 மே 05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டன.

## 2.2 இலங்கை கணக்கீட்டு நியமங்கள்

-----------------------------------------------

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் பணிக்கொடைக் கொடுப்பனவிற்காக ரூபா 17,234,144 தொகையான ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டு உரிய பொறுப்புக்களைத் தீர்ப்பதற்காக பயன்படுத்தப்படுவதற்கு நிதியம் முதலீடு செய்யப்பட்டிருந்த போதிலும் இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் பிரகாரம் இது தொடர்பாக இனங்காணப்படக்கூடிய வகையில் முதலீடு வேறாக கணக்குகளில் வெளிக்காட்டப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கை கணக்கீட்டு நியமம் 18 இன் பிரகாரம் செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தப்பட்ட சொத்துக்கள் பெறுமதியிடப்பட்டு கணக்கிடப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் நிலையான சொத்துக்களின் மீதியின் குறைத்தெழுதிய பெறுமதி ரூபா 1 வரையாக 600 பொருட்களும் ரூபா 2 முதல் ரூபா 100 வரை 440 பொருட்களும் நிலவியதுடன் அவற்றை மீள மதிப்பிடப்பட்டு கணக்கிடப்பட்டிருக்கவில்லை.

## 2.3 சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

-----------------------------------------------------------------------------------------------------------------------

1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 11 ஆம் பிரிவு மற்றும் 2004 யூலை 29 ஆம் திகதிய பீஈடீ 25 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் அங்கீகாரம் பெறப்படாது அரச வங்கி ஒன்றில் ரூபா 90,000,000 தொகை முதலீடு செய்யப்பட்டிருந்தது.

## 3. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

---

### 3.1 நிதிசார் மீளாய்வு

---

#### 3.1.1 நிதிசார் விளைவுகள்

---

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, 2010 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்காக நிறுவகத்தின் செயற்பாட்டு நடவடிக்கைககளில் வரிக்குப் பின்னர் ரூபா 96,314,318 தொகையான இலாபம் காணப்பட்டதுடன் இதனோடொத்த முன்னைய ஆண்டின் வரிக்குப் பின்னரான இலாபம் ரூபா 61,257,450 ஆகக் காணப்பட்டது. இதன் பிரகாரம், மீளாய்வாண்டின் வரிக்குப் பின்னரான இலாபத்தில் ரூபா 35,056,868 தொகையான அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. சம்பளங்கள், உசாவுகை மற்றும் பயிற்சி செலவினம் என்பவற்றின் அதிகரிக்கப்புடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டிற்கான பாடநெறி வருமானமும் ஏனைய வருமான அதிகரிப்பும் நிதிசார் விளைவுகளின் அதிகரிப்பிற்கு பிரதானமாகத் தாக்கமளித்திருந்தன.

#### 3.1.2 நிதிசார் விளைவுகளின் பகுப்பாய்வு ரீதியான மீளாய்வு

---

நிறுவகத்தின் மீளாய்வாண்டினதும் முன்னைய 04 ஆண்டுகளினதும் வருமானம், செலவினம், இலாபத் தன்மை மற்றும் மாணவர்களின் பங்கேற்பு தொடர்பான தகவல்கள் ஒப்பிடப்பட்டு பின்வருமாறு காண்பிக்கப்பட்டுள்ளது.

| விபரம் | | 2010 | 2009 | 2008 | 2007 | 2006 |
|---|---|---|---|---|---|---|
| வருமானம் | ரூபா | 524,008,538 | 366,178,891 | 298,241,785 | 238,006,772 | 196,080,898 |
| செலவினம் | ரூபா | 427,694,220 | 304,921,441 | 235,720,708 | 203,443,037 | 163,482,699 |
| வருமான மிகை (வரிக்குப் பின்னர்) | ரூபா | 96,314,318 | 61,257,450 | 62,521,077 | 34,563,735 | 32,598,199 |
| மாணவர் பங்கேற்பு | | 10,697 | 7,018 | 6,853 | 6,677 | 8,621 |
| ஒரு மாணவனுக்கான கிரயம் | ரூபா | 39,983 | 43,448 | 34,397 | 30,469 | 18,963 |
| ஒரு மாணவனுக்கான வருமானம் | ரூபா | 48,986 | 52,177 | 43,520 | 35,646 | 22,744 |

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2009 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான வருமானம் 43% ஆல் அதிகரித்திருந்த போதிலும் ஒரு மாணவனுக்கான வருமானம் 6% ஆல் வீழ்ச்சியடைந்திருந்தது.

(ஆ) 2009 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் மாணவர் பங்கேற்பு 52% ஆல் அதிகரிக்கப்படுகையில் ஒரு மாணவனுக்கான கிரயம் குறைவின் சதவீதம் 8% ஆகக் காணப்பட்டது.

**3.2 செயற்பாட்டு மீளாய்வு**

**3.2.1 செயலாற்றல்**

(அ) விரிவுரைகள் நடாத்தல்

பணிப்பாளர் நாயகத்தினால் தாபன விதிக்கோவை மற்றும் பொது நிர்வாகச் சுற்றறிக்கை, அறிவுறுத்தல்களுக்கு முரணாக நிர்வாக சபையின் அங்கீகாரத்துடன் வழங்கப்பட்ட 2008 யூன் 20 ஆம் திகதிய சுற்றறிக்கையின் பிரகாரம் 20 மணித்தியால விரிவுரைகளை நடாத்துவதற்கு தீர்மானிக்கப்பட்ட போதிலும் இது ஒரு கிழமைக்கா அல்லது மாதத்திற்கா என்பது தொடர்பாக தீர்மானிக்கப்பட்டிராத காரணத்தினால் ஒரு மாதத்திற்கு 20 மணித்தியாலங்களுக்கு மேலான விரிவுரைகளை மேற்கொண்டு மிகைக் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஆ) பாடநெறிகள் நடாத்தலிலான முன்னேற்றம்

(i) நிறுவகத்தினால் நடாத்தப்படும் பல்வேறு பாடநெறிகள் தொடர்பான ஆய்வின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| பாடநெறியின் பெயர் | பாடநெறியின் இல. | பதிவு செய்யப்பட்ட மாணவர் எண்ணிக்கை | முதற்தடவை பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கை | சித்தியெய்திய மாணவர்களின் எண்ணிக்கை | சித்தியடையாத மாணவர்களின் எண்ணிக்கை | சித்தியடை யாதவர்களின் சதவீதம் |
|---|---|---|---|---|---|---|
| கணனி விஞ்ஞான சான்றிதழ் பாடநெறி | 450669 2009.3 | 128 | 97 | 67 | 30 | 30 |
| மேற்படி | 450010 2010.1 | 262 | 232 | 135 | 97 | 42 |
| மேற்படி | 450110 2010.1(2) | 70 | 62 | 36 | 26 | 42 |

மேற்குறித்த விபரத்தின் படி பரீட்சைக்கு முதற்தடவை தோற்றி சித்தியடையாதவர்களின் சதவீதம் 30% - 42% ஆகக் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

(ii) கணனி முறைமைத் தயாரிப்பு தொடர்பான டிப்ளோமா பாடநெறி (2008.1) இற்காகப் பதிவாகிய மாணவர்கள் 229 ஆகக் காணப்பட்டதுடன் இவர்களில் 225 பேர் முதற்தடவையாகப் பரீட்சைக்குத் தோற்றியிருந்தனர். இம் மாணவர்களில் 79 பேரளவில் பரீட்சையில் சித்தியடைந்திருந்ததுடன் இதனை சதவீதமாக எடுக்கையில் 35% அளவிலான மிகக் குறைந்த சதவீதமே இருந்தது.

### 3.2.2 செயற்பாட்டுப் பிரிவுகளின் மீளாய்வு

மீளாய்வாண்டின் போது நிறுவகம் தமது செயற்பாடுகளை 03 பிரிவுகளினாலும் 03 கிளைகளினாலும் மேற்கொண்டிருந்தது. பின்வரும் தகவல்களின் மூலம் இப் பிரிவுகளின் நிதிசார் விளைவு தொடர்பான விபரம் தெளிவாகியுள்ளது.

| பிரிவு/ கிளை | வருமானம் | செலவினம் | மிகை/ (பற்றாக்குறை) |
| --- | --- | --- | --- |
| | ரூபா | ரூபா | ரூபா |
| முகாமைத்துவத் தகவல் பிரிவு | 185,204,558 | 94,565,380 | 90,639,178 |
| முகாமைத்துவ அபிவிருத்திப் பிரிவு | 216,791,200 | 117,379,932 | 99,411,268 |
| குருநாகல் கிளை | 54,249,513 | 38,035,166 | 16,214,347 |
| கண்டிக் கிளை | 23,059,947 | 17,805,485 | 5,254,462 |
| காலிக் கிளை | 32,547,103 | 34,191,700 | (1,644,597) |
| கட்டுப்பாட்டுப் பிரிவு | 12,156,217 | 110,278,820 | (98,122,603) |
| வரி மற்றும் முன்னைய ஆண்டுச் சீராக்கங்கள் | - | - | (15,437,737) |
| | | | 96,314,318 |

காலிக் கிளை மற்றும் நிர்வாகப் பிரிவின் நிதிசார் விளைவு வரி மற்றும் முன்னைய ஆண்டுச் சீராக்கத்திற்கு முன்னர் முறையே ரூபா 1,644,597 ஆகவும் ரூபா 98,122,603 ஆகவுமான பற்றாக்குறையாகும்.

### 3.2.3 பணிப்பாளர் சபையின் அமைப்பு

அதிகாரச்சட்டத்தின் பிரகாரம், 11 அங்கத்தவர்களைக் கொண்ட நிர்வாகச் சபைக்கு நியமிக்கப்பட வேண்டிய இலங்கை கைத்தொழில் அறிவுறுத்தற் சபையின் தலைவர், தேசிய அபிவிருத்தி வங்கியின் பொது முகாமையாளர், வர்த்தக வங்கிச் சங்கத்தின் தலைவர் போன்றவர்கள் நிர்வாக சபைக்கு நியமிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

-------------------------------------------------------

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலான குறைபாடுகள் நிறுவகத் தலைவரது கவனத்திற்கு அவ்வப்போது கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) விரிவுரைகள் நடாத்தல்

(ஆ) பாடநெறிகள் நடாத்தல்

(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(ஈ) முதலீடுகள்

(உ) கிளைகளின் செயற்திறன்